# MENTORING

## நம்பகமான ஆலோசகரும்

## ஆலோசனையும்



Pastor. Johanan D.Philip

ZION BIBLE INSTITUTE

## ஆசிரியரிடமிருந்து...

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். மிகவும் முக்கியமாக ஆவிக்குரிய தலைவர்களும், அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளும் ஊழியர்களும் எவ்விதமாக செயற்பட வேண்டும் என்று "நம்பகமான ஆலோசகரும் ஆலோசனையும்" என்ற பாடத்தின் மூலம் தெளிவாக கற்றுக்கொள்வீர்கள்.

இதில் அடங்கியுள்ள ஆவிக்குரிய சத்தியங்கள் பல அமெரிக்காவில் உள்ள Christ For The Nations Dallas Texas USA வேதாகம கல்லூரியில் கற்பிக்கப்பட்டவை. இப்பாடத்திற்காக நான் முதற்கண் தேவனுக்கு நன்றி செலுத்துவதோடு கற்பித்த ஆசிரியர் போதகர் அடம் மக்கேய்னுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

ஒரு நாள் சீயோன் வேதாகம பாடசாலை மாணவர்களுக்கு நான் இப்பாடத்தை கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தவேளையில் எமது தலைமைப் போதகர் பாடத்தை கேட்டுக்கொண்டிருந்தார். அத்துடன் இப்பாடம் வேதாகம பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்ததினால், தலைமைப்போதகர் இப் பாடத்தை கருத்தரங்காக நடாத்தி பாடநெறியை அச்சிட்டும்படி என்னை ஊக்குவித்தார். எனவே இப்பாடநெறிகுறித்த கருத்தரங்கை நடாத்தி, பாடநெறியை அச்சிட்டு வெளியிட உற்சாகப்படுத்திய எமது தலைமைப்போதகரும், எனது தகப்பனும், எனது ஆலோசகருமான போதகர் ஜோசயா பிலிப்பிற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் இதற்கு ஒத்தாசை கொடுத்த சீயோன் வேதாகம பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

இதில் அடங்கியுள்ள காரியங்களை கவனமாக வாசிப்பது மட்டுமன்றி நடைமுறை வாழ்க்கையில் செயற்படுத்துவீர்களாக இருந்தால் நிச்சயமாகவே தேவன் தாமே உங்களையும் உங்கள் தேவபணியையும் நிறைவாக ஆசீர்வதிக்கவேண்டும் என்று உங்களுக்காக ஜெபிக்கின்றேன்.

**போதகர். ஜோகனன் டேவிஸ் பிலிப்.**

**நிறைவேற்றுப்போதகர்,**
**சீயோன் தேவாலயம்,**
**யாழ்ப்பாணம்.**

# WHO IS YOUR MENTOR?

## உன் ஆலோசகர் (வழிப்படுத்துனர்) யார்?

கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு உன்னதமான தேவனே தலைவராக அல்லது ஆலோசகராக இருக்கிறார். ஆனாலும் தேவனுடைய பணி செய்யும் ஒவ்வொரு ஊழியனுக்கும் இயேசுவுக்கு அடுத்ததாக உலகத்தில் அவர்களுடன் இருந்து அவர்களுக்கு தேவனின் ஆலோசனைகளைக் கொடுப்பதற்கு ஒரு தலைவர் அல்லது ஆலோசகர் நிச்சயம் அவசியமானது. வேதாகமத்தின் சம்பவங்களைப்பார்த்தால், உ+ம் சவுல் ராஜாவுக்கு தலைவராக அல்லது ஆலோசகராக சாமுவேல் தீர்க்கதரிசி இருந்தான். அதேபோல தாவீது ராஜாவுக்கும் சாமுவேல் தீர்க்கதரிசி தலைவராக அல்லது ஆலோசகராக இருந்தான். தேவ கட்டளையின்படி சவுலையும், தாவீதையும் அபிஷேகம் பண்ணியது சாமுவேலே. இன்றைக்கு உன்னை தேவ நியமனத்தின்படி ஊழியனாக அபிஷேகம் பண்ணுவித்த தேவ மனிதன் யார்? உண்மையிலேயே அவரே உனது ஆலோசகர் அல்லது தலைவர். உன் மேலே அவருக்கு முழு உரிமையும் உண்டு. சவுல், தாவீது இருவருடைய வாழ்வை, செயற்பாடுகளை பார்த்தால் சவுல் தனது அபிஷேகத்தை சரியாக பயன்படுத்தவில்லை. அவன் ஆண்டவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியாமல் போனபோது (1 சாமு 15:2-23) தேவன் அவனை ராஜாவாக இராதபடி புறக்கணித்து தள்ளினார். சவுலுக்கு தேவன் கொடுத்த கட்டளை நேரடியாக தேவனிடமிருந்து கிடைக்கவில்லை. மாறாக அவனது தலைவர் அல்லது ஆலோசகரிடமிருந்து கிடைக்கப்பெற்றது. இன்றைக்கு உன் தலைவர் அல்லது ஆலோசகர் அல்லது தலைமைத்துவம் உனக்கு இடும் கட்டளை தேவ திட்டத்திற்கு அமைவானது. அதற்கு கீழ்ப்படியாவிட்டால் ஆண்டவர் உன்னை அப்புறப்படுத்துவார். ஜாக்கிரதை!

சவுல், தேவன் அபிஷேகம் பண்ணிய தாவீதை கொலை செய்ய வகை தேடினான். சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஈட்டியை அவன் மீது எறிந்தான். ஆனால் தாவீதோ தேவன் சவுலை அவனுக்கு ஒப்புக்கொடுத்த போதும் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் சவுல் என்பதால் அவன் மீது கைபோட பயந்தான். இன்றைக்கு நீங்கள் தேவன் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாக கதைக்கிறீர்களா அல்லது சண்டைபோடுகிறீர்களா? கொலைசெய்ய பார்க்கிறீர்களா? அப்படியானால் தேவன் உங்களை அபிஷேகித்த நோக்கத்தையும் அபிஷேகத்தையும் அலட்சியம் பண்ணுகிறீர்கள்.

சாமுவேலுக்கு பிரதான ஆசாரியனாகிய ஏலி தூர ஆலோசகராக இருந்தான்; ஆனாலும் ஏலியின் குமாரராகிய ஒப்பினியும் பினேகாசும் சாமுவேலுக்கு நெருங்கிய ஆலோசகர்களாக இருந்தார்கள், அப்படி இருந்தும் சாமுவேல் தவறான ஆலோசனைகளை பின்பற்றவே இல்லை.

இன்றைக்கு எமது வாழ்வில் தாவீது ராஜாவைப்போல அபிஷேகத்தை தக்கவைத்தவர்களாக ஜீவிக்க வேண்டும். சாமுவேல், ஏலி இருக்கும் வரைக்கும் அவனுக்கு அடங்கி நடந்தான். ஏலி மரித்த பின் சாமுவேலுக்கு ஆலோசகர் அல்லது தலைவர் இல்லை. இரண்டு விதமான தலைவர் அல்லது ஆலோசகர் ஒருவருக்கு இருக்க முடியும்.

1. தூர ஆலோசகர் அல்லது தலைவர்.
2. நெருங்கிய ஆலோசகர் அல்லது தலைவர்.

தூர ஆலோசகரை எப்போதும் நாட முடியாது. எனவே ஊழிய வாழ்வுக்கு நெருங்கிய ஆலோசகர் மிக அவசியம். எமது வாழ்வின் சகல காரியங்களையும் ஒழிவு மறைவு இல்லாமல் அவருடன் பகிர்ந்து, ஒவ்வொரு அடியும் எவ்விதம் எடுத்து வைக்க வேண்டும் என்பதை காண்பிக்க நெருங்கிய ஆலோசகர் அவசியம்.

எமக்கு தூர ஆலோசகராக அல்லது தலைவராக இருப்பவருக்கும் நாம் நெருங்கிய தலைவராக அல்லது ஆலோசகராக தெரிந்துகொள்பவருக்கும் இடையிலே நெருங்கிய உறவு நிச்சயம் அவசியம். அப்படியானால் தான் எமக்கு கிடைக்கும் ஆலோசனை சரியானதாக வரும். எமது நெருங்கிய ஆலோசகர் தூர ஆலோசகரிடம் கட்டாயம் கற்றவராகவே இருக்க வேண்டும். இல்லையென்றால் வெவ்வேறு விதமான ஆலோசனைகள் நமக்கு வரும். எதை ஏற்றுக்கொள்வது என்ற நிலையிலே தடுமாற வேண்டி ஏற்படும். சபையை பொறுத்தமட்டில் சபையின் மேய்ப்பர் தூர இடத்தில் இருந்தால் அவர் தூர ஆலோசகர். அவருக்கு எல்லாருடனும் நேரம் செலவிட முடியாது. எனவே அவரை நெருங்கிய ஆலோசகராக கொண்டு அவரை பின்பற்றும் ஒருவரை தெரிவு செய்து அவரை எமது நெருங்கிய குருவாக ஏற்படுத்தலாம். அப்பொழுது சபை மேய்ப்பரின் ஆலோசனை நமக்கு கிடைக்கும்.

## ஆலோசகர் அல்லது தலைமைத்துவத்துடன் எவ்வாறு சரியான நெருக்கமான உறவைப் பேணலாம்

சபையில் உள்ள ஊழியர்களிடம் கேட்டால் இது கடினமான காரியம் என பலர் கூறுவர். அதிகாரத்துடன் அல்லது தலைமைத்துவத்துடன் உறவு பேண முடியாது என்பர். ஆனால் அதை வேதம் அங்கீகரிக்கவே இல்லை. தேவ ஊழியர் என்று

கூறும் நாம் பரிசுத்த வேதம் அங்கீகரிக்கின்ற காரியத்தை, இது நடக்கும், இது செய்ய முடியாது என்று ஒரு போதும் சொல்ல முடியாது.

ரோமர் 13:1 "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன் ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது"

எல்லா அதிகாரமும் தேவனால் உண்டானபடியால் அவற்றுக்கு உன்னை முற்றுமாக ஒப்புக்கொடுத்து பணிந்து நட.

## உன்னுடைய வாழ்க்கையின் அதிகாரிகள் யாவர்?

1. தேவன்
2. ஆவிக்குரிய தலைவர்கள்.
3. திருமணமாகாதவராயின் பெற்றோர்.
4. அரசாங்கம்.
5. மேற்பார்வையாளர்கள்.

நல்லதும் தீயதுமான அதிகாரங்கள் தேவனால் உண்டானது. எனவே அதற்கு பணிய வேண்டும்.

தலைவர்களுக்கு அல்லது ஆலோசகர்களுக்கு அல்லது தலைமைத்துவத்திற்கு கனம் கொடுக்க வேண்டும்.

### கனம்:

மிக அதிகமாக விலையேறப்பெற்றது என்று கணக்கிடும் காரியங்களுக்கு மரியாதை கொடுத்தல்.

### கனவீனம்:

சாதாரணம் / பொதுவான விடயம் தானே என கருதி மரியாதை கொடுக்க தவறுவது.

உங்களது தலைவரை அல்லது ஆலோசகரை அல்லது தலைமைத்துவத்தை கனத்தோடும் மரியாதையோடும் நடத்துவீர்களானால் தேவன் எல்லாவற்றையும் கவனத்தில் கொள்ளுவார்.

தேவனுடைய மகிமையை கனப்படுத்த தவறிய ஊசா செத்தான். தேவனுடைய பெட்டி அசையும் போது அதற்கு முன் தன் கரத்தை நீட்டினான். சாதாரண விடயம் என்று அவன் நினைத்தான். தேவ பெட்டி தோள்களில் சுமக்க வேண்டும். இன்றைக்கு தேவ ஊழியர்களாகிய எங்களது தோளில் தேவ பிரசன்னத்தை சுமந்தவர்களாகவே இருக்க வேண்டும்.

### 01. எதிர்பார்க்க முடியாத காரியங்களை எதிர்பார்க்க வேண்டாம்.

எங்களுடைய அதிகாரங்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாத காரியங்களை ஒருபோதும் எதிர்பார்க்கிறவர்களாக இருக்கவே முடியாது. எமக்கு சபையில் அந்த பதவி கிடைக்க வேண்டும் அல்லது என்னை திருநிலைப்படுத்த வேண்டும், அல்லது சபையில் பொறுப்புத் தர வேண்டும், அல்லது மூப்பர் பதவி தர வேண்டும் போன்ற பதவி ஆசைகளை எதிர்பார்க்கவே கூடாது. அதிகாரத்தை நியமிப்பது ஆண்டவர், இவை எனக்கு வர வேண்டும் என்று ஒருபோதும் அதை எதிர்பார்த்திருக்கக் கூடாது. உங்களை அதிகாரிகள் எந்த நிலையில் வைத்திருக்கிறார்களோ அந்த நிலையில், கொடுக்கப்பட்ட வேலையில் உண்மையுள்ளவர்களாக மேலான காரியத்தை எதிர்பார்க்காமல் தேவனுக்கும் அதிகாரத்துக்கும் உண்மையாக அவர்களைப் பிரியப்படுத்த தகுந்த விதத்தில் நடக்க வேண்டும். இப்படி நடக்கும் போது உங்களுக்கும் உங்கள் அதிகாரத்துக்கும் இடையில் பிரச்சினைகள், முறுமுறுப்புக்கள் உண்டாகாது. உறவு சீரான நிலையில் இருக்கும்.

### 02. கனம் செலுத்த வேண்டிய இடத்தில் அவர்களை (பதவியில்) கருது.

உங்களுக்கு மேலாக இருக்கும் அதிகாரிகள் எந்த பதவியில் (எந்தநிலையில்) இருக்கிறார்களோ, அந்த நிலைக்குரிய சரியான கனம் அவர்களுக்குசெலுத்தப்பட வேண்டும். விசேடமாக ஊழிய ரீதியில் பார்க்கும் போது தேவனுடைய ஊழியர்கள் இரட்டிப்பான கனத்துக்குரியவர்கள் என்று வேதாகமம் கூறுகிறது. இன்றைக்கு உங்கள் அதிகாரத்திற்கு எவ்வாறு கனம் கொடுக்கிறீர்கள். அதிகாரத்தையும் அவர்கள் சொல்லுகின்ற கற்பிக்கின்ற அவர்களது நடைமுறைகள் போன்றவற்றை மிக அதிகமாக விலையேறப் பெற்றது என்று கணக்கிட்டு அவர்களுக்குக் கனம் கொடுக்கின்றோமா? அல்லது இது பொதுவான, சாதாரண விடயம் என்று கனவீனம் கொடுக்கின்றோமா? எவ்வாறு அவர்களுக்குக் கனம் கொடுக்கலாம் என்றால் அவர்களுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவர்களைப் பிரியப்படுத்த நடத்தல் வேண்டும்.

### 03. உங்கள் வாழ்வை முழுவதும் அவர்களுக்கு அர்ப்பணியுங்கள்.

அதிகாரங்களுக்கு எங்களுடைய வாழ்வை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். தேவன் சபையை ஆட்டு மந்தைக்கு ஒப்பிடுகிறார். நீங்கள் மந்தைகள் உங்களுக்கு ஓர் மேய்ப்பன் உண்டு. செம்மறி ஆடு மந்தைக்குள் வரும் போது மேய்ப்பன் அதைத் தடவி, காயம் ஏதும் இருக்கின்றதா என்று முழுவதும் பரிசோதித்தே தொழுவத்துக்குள் விடுவான். அதே போல மந்தைகளாகிய உங்களுக்கும் இருக்கும் மேய்ப்பன் உங்களை பரிசோதனை செய்ய இடங் கொடுப்பதே மந்தைக்குரிய சிறந்த குணாதிசயம் ஆகும்.

உங்கள் வாழ்க்கையில் மேய்ப்பனுக்கு முழு உரிமையும் உண்டு. எனது வாழ்க்கையில் போதகருக்கு உரிமை இல்லை என்று சொல்லக் கூடாது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதும் 2ம் நிருபத்தில் 8:5 *"மேலும் நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்".*

பின்பு எங்களுக்கும் ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். இதே போல உங்கள் போதகர், ஆலோசகர் உங்களைக் குறித்தும் சாட்சி கூறக் கூடிய வகையில் அவருக்கு முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்.

### 04. உங்களை மேற்பார்வை செய்ய முழு உரிமையும் கொடுங்கள்.

அதாவது உங்களுடைய ஒவ்வொரு செயற்பாட்டையும் அவர்கள் மேற்பார்வை செய்ய வேண்டும். உங்களது உடை, நடை, பேச்சு எல்லாமே இதற்குள் அடங்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையிலே கண்ணும் கருத்துமாக செயற்பட வேண்டும். உங்கள் அதிகாரிகள் உங்கள் மேல் அதிகாரம் செலுத்தும்படி நியமிக்கப்பட்டவர்கள். நீங்கள் எங்கு போகிறீர்கள்?, மற்றவர்களுடன் எப்படி பழகுகிறீர்கள்?, உலக மக்களைப்போல உடை அணிகிறீர்களா? அல்லது தேவனைப் பிரியப்படுத்தத்தக்க உடை அணிகிறீர்களா? என்றெல்லாம் மேற்பார்வை செய்ய வேண்டும். அப்படி அவர்கள் தங்களது கடமையைச் செய்து உங்களை மேற்பார்வை செய்யும்போது அவர்களுக்கு உங்களது வாழ்வை ஒளிக்கக்கூடாது. அவர்கள் எனது வாழ்வை மேற்பார்வை செய்ய முடியாது என்று விவாதிக்கக்கூடாது. அவர்களுக்கு உங்களது வாழ்வின் முழு உரிமையையும் கொடுக்க வேண்டும். இது எனது தனிப்பட்ட உரிமை, எனக்கு சுயாதீனம் இல்லையா? என்று கேட்கவே கூடாது. நாம் சேவிக்கும் ஆண்டவர் ஒழுங்கின் தேவன்; எனவே அவர் ஒழுங்கு விதிகளை எமக்கு வைத்திருக்கின்றார். எனவே அதிகாரத்துடன் உறவைப்பேண உன்னை அவர்கள் மேற்பார்வை செய்ய அனுமதிக்க வேண்டும்.

### 05. அவர்களும் மனிதர்களே என்று நன்கு உணர்ந்து கொள்.

உங்களுக்கு மேலாக அதிகாரத்தில் இருப்பவர்களும் 100% மனிதர்களே. அவர்கள் வேறு எங்கும் இருந்து வரவில்லை; உங்களைப்போலவே உலகத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். அவர்களும் தவறு விடக்கூடும், மாறாக தவறுவிடாமல் 100% சரியாக இருப்பவர்கள் அல்ல. எனவே இதை நீங்கள் நன்றாக உணர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் ஏதாவது தவறு விட்டால் அதைப்பிடித்துக் கொண்டு அவர்கள் அது செய்துவிட்டார்கள் என்று நினைக்க வேண்டாம். அல்லது எப்போது தவறு விடுவார்கள் என்று எந்நேரமும் குற்றம் கண்டுபிடிக்க சந்தர்ப்பம் தேடவும் வேண்டாம். அவர்களது செயற்பாடுகள் என்ன? அவர் போதிப்பது என்ன?

என்று அவர்களை குறித்து தகவல் திரட்டி தீய நோக்கத்திற்காக அதாவது அவர்களை வெட்கப்படுத்தத்தக்க காரியங்கள் செய்வதற்கு முயற்சிக்க வேண்டாம். அப்படி அவர்கள் தவறுவிட்டால் ஞானத்துடன் அவர்களுக்கு தெரிவியுங்கள் ஏனெனில் அவர்களும் மனிதர்களே!

**06. ஒவ்வொரு நாளும் அவர்களுக்காக ஜெபிப்பது உங்களை அவர்கள் ஆவியுடன் ஒற்றுமைப்படுத்தும்.**

காலையில் எழுந்தவுடன் தேவன் உங்கள் மேலாக உங்களை கவனிப்பதற்கு, உங்களுக்கு ஆலோசனை தருவதற்கு அல்லது நீங்கள் பின்பற்றத்தக்க ஒருவரை தந்தபடியால் அவருக்காக நன்றிசெலுத்தி ஜெபிக்கின்ற போது உங்களுடையதும் அதிகாரிகளுடையதுமான ஆவி தேவனுக்குள்ளாக ஐக்கியப்படும். எனவே ஒரே சிந்தையுடையவர்களாக ஆவியிலே ஒருமைப்படுவீர்கள். உண்மையுடன் கூடிய கருத்தான ஜெபம் உங்களை ஒற்றுமைப்படுத்தும்.

**07. அவர்களுடைய பரிமாறும் வழிமுறைகளை கற்றுக்கொள்ளுங்கள்.**

அவர்களுடைய தொடர்பாடல் மொழிகளை கற்றிருத்தல் அவசியமாகும்.

✔ **பார்த்தல்.**

அவர்களுடைய செயற்பாடுகள் உடை, நடை பாவனை, பேச்சு போன்றவற்றை கூர்ந்து அவதானிக்கவேண்டும்.

✔ **கேட்டல்.**

அவர்கள் கூறுகின்ற ஆலோசனைகள் என்ன என்று கேட்க வேண்டும். இதற்கு கட்டாயம் நேரம் ஒதுக்கி அவர்களிடம் போய் அமர்ந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

✔ **கிரகித்து உள்ளடக்குதல்.**

அவர்களிடம் இருந்து பார்த்து, கேட்ட காரியங்களை அப்படியே மூளை அறிவிற்காக மட்டும் பெற்று விட்டுவிடாமல் அவற்றை ஏற்றுக்கொண்டு உங்களுடைய வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்த வேண்டும்.

**08. அவர்களுடைய அன்பு மொழிகளை கற்றுக்கொள்ளுங்கள்.**

அவர்களுடைய இனிமையான பாஷைகளை பழகிக் கொள்ளவேண்டும். அவர்கள் எவ்விதம் இதமாக இனிமையாக கதைக்கின்றார்கள், அவர்களது அன்பு மொழிப்பாவனை என்ன என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள்.

## 09. அவர்களிடம் சில கேள்விகளை கேளுங்கள்.

✔ **நான் உங்கள் நம்பிக்கையை உடைத்து நொறுக்கி விட்டேனா?**

அதாவது நீங்கள் என்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு பாத்திரவானாக நான் நடக்காமல் உங்கள் நம்பிக்கையை சிதைக்கும் விதத்திலே என்னுடைய உடை, நடை, செயற்பாடுகள், பேச்சுகள் அமைந்து விட்டனவா? எனது செயற்பாடுகள் உங்கள் நம்பிக்கைக்கு ஏமாற்றத்தை அளித்ததா? போன்ற காரியங்கள் தொடர்பில் உங்களை ஆராயலாம்.

✔ **நான் எதையாவது செய்ய தவறிவிட்டேனா?**

நீங்கள் எனக்கு செய்ய இட்ட கட்டளைகளில் ஏதாவது நிறைவேற்ற தவறிவிட்டேனா? அல்லது என்னிடம் நீங்கள் எதிர்பார்த்த காரியத்தை செய்ய தவறிவிட்டேனா? அல்லது எனது செயற்பாடுகள் முழுமைத் திருப்தியாக இருக்கவில்லையா? எனக் கேளுங்கள்.

✔ **ஏதாவது வழியிலே உங்களுக்கு கனம் கொடுக்க தவறிவிட்டேனா?**

உங்களை மிக அதிகமான விலையேறப்பெற்றவர்கள் என்ற நிலையில் வைத்து மரியாதை செலுத்தாமல், உங்களுடைய வார்த்தைகள் ஆலோசனைகள் போன்ற காரியங்களை சாதாரணவிடயம் அல்லது பொதுவான காரியம்தானே என நினைத்து கனவீனப்படுத்தி விட்டேனா?.

அவர்களுடன் பழகிக் கதைக்கும் போது இப்படிப்பட்ட சில கேள்விகளை அவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்ளுங்கள். அதாவது உங்கள் வாழ்கை மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக அவர்களிடம் கேள்வி கேட்டு உங்களுடைய நிலையை அறிந்து கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுக்கும் அதிகாரத்திற்குமிடையில் சரியான உறவு பேணலாம்.

## 10. உனக்கெதிரான தவறான முடிவுகளை ஞானத்துடன் முறையிடுங்கள்.

உங்களுக்கு எதிராக அவர்கள் எடுத்த முடிவுகள் உண்மையிலே தவறானதாக இருந்தால் அல்லது உங்களுடைய செயற்பாடுகளை அவர்கள் தவறாக விளங்கிவிட்டால் அதை ஞானமாய் தாழ்மையுடன் அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள் அல்லது கனம் கொடுத்து முறையிடுங்கள். அதற்கு மாறாக திருப்பி கதைத்து, இது எனது உரிமை எனவே எனது உரிமைக்காக போராட வேண்டும்; என்று சொல்லி சண்டையிட அல்லது விவாதப்பட வேண்டாம்.

### I. அவர்களுடன் நேரம் செலவிட நேரத்தை உருவாக்கி கொள்ளுங்கள்.

உங்களது அதிகாரிகள் அல்லது ஆலோசகர் அல்லது தலைவருடன் நீங்கள் மிக முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறை; அவர்களுடன் நேரம் செலவிட நீங்கள்தான் தருணங்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். நீங்கள் மட்டுமல்ல உங்கள் குடும்பத்தையும் அழைத்துச் சென்று ஆலோசகருடன் நேரம் செலவிடுவது சிறந்த முறையாகும். அவர் உங்களை அழைக்கும்வரை பார்த்திருக்க வேண்டாம். நீங்களாகவே அவரை நாடிச் செல்ல முயற்சிக்கவேண்டும்.

## தலைவர் அல்லது ஆலோசகர் அல்லது தலைமைத்துவம் உங்களை தவறாக நடத்துகின்றது என்று நீங்கள் கருதினால்

### I. உங்களைப்பார்த்தே சில கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

உங்களுடைய மேல் அதிகாரிகள் உன்னை தவறாக நடத்துகின்றார்கள் என்று நீ கருதினால் உன்னைப் பார்த்தே சில கேள்விகளை கட்டாயம் கேட்க வேண்டும். அந்தக் கேள்விகள் மூலம் உன்னுடைய உண்மையான நிலையும் அதிகாரிகளுடைய நிலையும் ஓரளவுக்கு உன்னால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இப்படிப்பட்ட கேள்விகளை கேட்காதவிடத்து சிலவேளை நாம் அவசரப்பட்டு அல்லது உணர்ச்சிவசப்பட்டு தமைத்துவம் என்னை தவறாக நெறிப்படுத்தி விட்டது என்று நினைத்துவிடுவோம். தலைமைத்துவத்தை குறித்து ஒருபோதும் தவறாக சிந்தனையில் கூட நினைக்க கூடாது.

✔ **நான் உண்மையிலேயே தவறாக நெறிப்படுத்தப்பட்டேனா?**

உங்களைத் தவறாக நெறிப்படுத்தி விட்டார்கள் என்று தோன்றும் போது நீங்கள் உங்களைப் பார்த்தே இக் கேள்வியை கேட்க வேண்டும். அவர்கள் எனக்கு எதிராக எடுத்த முடிவுகள் தவறானதா? அல்லது எனது செயற்பாட்டை தவறாக விளங்கி விட்டார்களா? என்று கேள்விகேட்டு சரியான நேர்மையான பதிலைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

✔ **இந்தக் காரியத்தினூடாக தேவன் எனக்கு கற்றுக்கொடுப்பது யாது?**

அவர் எடுத்த முடிவு தவறானதாக இருந்தால், ஆண்டவர் எனது தலைமைத்துவம் என்னைக் குறித்து தவறான முடிவு எடுக்க ஏன் அனுமதித்தார் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதற்கூடாக ஆண்டவர் எனக்கு கற்றுக்கொடுக்கும் காரியம் என்ன? இதன் மூலம் எனது வாழ்வில் சரிசெய்து கொள்ள வேண்டிய அல்லது நான் கூடிய கவனம் எடுக்க வேண்டிய காரியங்கள் என்ன என ஆராயவேண்டும். எமது வாழ்வில் ஆண்டவரின் அனுமதியில்லாமல் ஒரு காரியமும் நடக்காது எனவே இவ்வாறு நடைபெற நான் என்ன செய்தேன் என்று தேடிப்பார்க்க வேண்டும்.

## ✔ என்னுடைய உணர்ச்சிகளை சரியாக தலைமைத் துவத்துடன் பகிர்ந்து கொண்டேனா?

உங்களுக்குள் இருக்கும் உணர்வுகள் எல்லாம் சரியாக தலைமைத்துவத்திடம் தெரிவிக்கப்பட வேண்டும். அப்படி எல்லாவற்றையும் மறைக்காமல் அவர்களுக்கு விளக்கினால் தவறாக வழிநடத்தப்படல் என்பது தவிர்க்கப்படும். உங்களுடைய எல்லா நிலைகளும் அவர்களுக்கு தெரிந்தால் அதற்கு ஏற்றவாறு அவர்கள் உங்களை நெறிப்படுத்த முடியும்.

## ✔ என்னுடைய உத்தேசம்/உள்ளெண்ணம் சரியானதா?

உங்களுக்குள்ளே இருக்கின்றதான அடிப்படை எண்ணம் அல்லது உத்தேசம் அல்லது எண்ணக்கரு அதாவது ஆலோசகர் குறித்து அல்லது அவர்களுடைய செயற்பாடுகள் மற்றும் இருவருக்கும் இடையிலான உறவு குறித்த உள்ளெண்ணம் சரியாக இருக்கின்றதா? என புரிந்து அறிந்து கொள்ள வேண்டும்.

## ✔ யாரையும் கனப்படுத்த தவறிவிட்டேனா?

இன்னுமொரு கேள்வியாக எனது செயற்பாடுகள் அல்லது பேச்சுக்கள் ஏதாவது முறையிலாவது அவர்களை கனப்படுத்தாமல் அமைந்து விட்டனவா?. அவர்களுடைய ஆலோசனைகளை ஏற்க முடியாமல் கோபம் வரும்போது கதவுகளை இழுத்து அடித்து சாற்றிவிட்டு போகின்றோமா? அல்லது அவர்களை இழிவுபடுத்தக்கூடிய வகையில் கதைத்திருக்கின்றோமா? அல்லது நடந்திருக்கின்றோமா? அவர்கள் சொல்கின்ற காரியங்கள் பொதுவானவை அல்லது சாதாரணமானவை என அலட்சியப்படுத்துகின்றோமா? அவர்கள் நேரத்திற்கு ஆராதனைகளுக்கு வரும்படி கேட்கும் போது வேண்டுமென்றே நேரம் தாழ்த்தி செல்வோமாயிருந்தால் தேவனையும் கனவீனப்படுத்தி, அதிகாரங்களையும் கனவீனப்படுத்துகின்றோம். ஜாக்கிரதை!

## 02. தலைவர் அல்லது ஆலோசகர் அல்லது தலைமைத்துவத்திற்கு எதிராக மற்றவர்களுடன் கதைக்கவோ வழக்கு தொடரவோ, கூடாது

இது மிகவும் முக்கியமானதொரு காரியம். அவர்களைக் குறித்தோ அல்லது அவர்கள் செயற்பாடு குறித்தோ மற்றவர்ளுடன் கூடிக் கதைக்க கூடாது. அரட்டை அடிக்க (Gossip) கூடாது. எல்லாருக்கும் தெரியப்படுத்தி அதை ஒரு பெரிய கதையாக உருவாக்க கூடாது. இன்றைக்கு பலர் உணராமலோ அல்லது தெரிந்தோ விடுகின்ற தவறு இது. அவர்களுக்கு இப்படிப்பட்ட காரியத்தை குறித்து கதைக்காவிட்டால் திருப்திப்படாது. ஆனால் தாவீதை அவதானித்தால் சவுல் ராஜாவாக இருக்கும் வரைக்கும் தாவீது சவுலை கொலை செய்ய முற்படவும் இல்லை, அவனுக்கு எதிராக செயற்படவும் இல்லை. நாம் என்ன செய்கின்றோம் என்று எம்மை நிதானித்துப் பார்ப்போம்.

## 13. தாழ்மையோடு அவர்களுக்கு பணிவிடை செய்யுங்கள்.

இன்றைக்கு தலைவருக்கு அல்லது ஆலோசகருக்கு பணிவிடை செய்கின்றவர்கள் மிகச் சிலரே. ஆனால் தேவனுக்கு பணிவிடை செய்யும் நாங்கள் உங்களுக்கு மேலே இருக்கும் அதிகாரங்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும். "தாழ்மை குணம் என்னில் கண்டால் இயேசு வந்திடுவார், பெருமை குணம் என்னில் கண்டால் ஐயோ போய்விடுவார்" என்று சிறுவர்கள் பாடும் ஒரு பாடல் உண்டு. பெருமை உள்ளவர்களை இன்றைக்கும் காணலாம். ஆனால் தேவன் கிருபை அழிப்பது தாழ்மையுள்ளவர்களுக்கே. எனவே கிறிஸ்துவை பிரதிபலிக்கும் நீங்கள் தாழ்மையோடு அவர்களுக்கு பணிவிடை செய்யுங்கள்.

## 14. உங்களுடைய உணர்ச்சிகளை அல்ல உண்மைகளை மட்டுமே தெரிவியுங்கள்.

தலைவர் அல்லது ஆலோசகர் அல்லது தலைமைத்துவம் உன்னை தவறாக வழிநடத்துகிறது என்றால் உன்னுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்தாது, உண்மையிலேயே நடந்த காரியத்தை மாத்திரம் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். மாறாக மிகைப்படுத்தி அல்லது உண்மையை திரிவுபடுத்தி கூறாதே.

## 15. உங்களுடைய பங்குக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்.

தலைமைத்துவம் தவறாக வழிநடத்திவிட்டது என்று நினைத்தால் அதில் உனக்கும் ஏதாவது பங்கு இருக்குமானால், அதாவது தவறாக நடத்தப்பட்ட காரியத்தில் ஏதாவது முறையில் நீ தொடர்புபட்டால் உன்னுடைய பங்குக்கு நீ பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். அதைப் பொறுப்பேற்காமல் அதை மழுப்பி விடாதே.

## 16. அவர்களுடைய ஆலோசனைக்கு அர்ப்பணித்து செவிசாய்க்க ஆயத்தப்படுத்துங்கள்.

உங்களை முற்றிலும் அர்ப்பணித்து அவர்கள் கூறும் ஆலோசனைகளை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக்கொண்டு அப்படியே செவிசாய்த்து அதின்படி நடக்க உங்களை முற்றிலும் அர்ப்பணித்து விடுங்கள். முக்கியமான காரியம் யாரை தேவன் உங்களுக்கு தலைவராக தந்திருக்கிறாரோ, அவருடைய ஆலோசனைகளுக்கு மட்டுமே செவிசாய்த்து அதற்கு பணியவேண்டும் என்பதுதான் மிகமுக்கியமான விடயம்.

## 07. வெவ்வேறு ஆலோசகர்களை நாடி போகாதிருங்கள்.

இவர் கொடுத்த ஆலோசனை சரியா? அல்லது இவரது ஆலோசனைக்கு ஒத்த ஆலோசனையை வேறு யாரும் தருவார்களா? என்று ஆலோசனைக்காக எவரிடமும் ஓடித்திரிய வேண்டாம். செம்மறியாடு தன் சொந்த மேய்ப்பனின் சத்தம் கேட்டு அவரை பின்பற்றும் (யோவான் 10:4). உண்மையிலே நீங்கள் தேவனாலே அந்த மந்தைக்குள் விடப்பட்டிருந்தால் உங்கள் தலைவனின் ஆலோசனையை மட்டுமே பெற்று அதன்படியே செய்வீர்கள். அதை விட்டுவிட்டு அந்த ஆலோசனை சரியல்ல என்று வேறு இடத்துக்கு மாறி பின் அந்த ஆலோசனை சரியல்ல என்று வேறு இடத்திற்கு மாறி இப்படி நிலையில்லாமல் மாறி மாறி ஓடித்திரிந்தால் நாம் துன்மார்க்கராக மாறிவிடுவோம் ( சங் 1:4 ). (சொப்பிங் பை காற்றிலே விட்டால் அது நிலைத்து நிற்காது அங்கும் இங்குமாக மாறி மாறி நிற்கும்). நீயும் காற்று பறக்கடிக்கும் பதரைப்போல நிலையற்றவனாய் வாழ்ந்தால் துன்மார்க்கனே.

## 08. கனத்தோடு விட்டு விலகுங்கள்.

ஒவ்வாத காரணங்களினால் உங்கள் தலைமைத்துவத்துடன் இசைந்து செல்லமுடியாத சூழ்நிலைகள் உங்களுக்கு உருவாகும்போது அல்லது நீங்கள் வேறு தலைமைத்துவத்துக்குள் அடங்கி நடக்க விரும்பும்போது உங்களுக்கு இருந்த தலைமைத்துவத்தை மதித்து கனத்தோடும் மரியாதையோடும் விட்டு விலகுங்கள். மாறாக தரக்குறைவாக பேசியோ அல்லது எதிரிடையான செயற்பாடுகளை காண்பித்து அவர்களுக்கு கனவீனம் ஏற்படக்கூடியவாறு செயற்பட வேண்டாம். பண்பாக விட்டு விலகுங்கள்.

## <u>ஊழியங்களில் பிரிவினை உண்டாக்காதீர்கள்.</u>

கனத்தோடு விட்டு விலகும்போது ஊழியங்களை பிரித்துக்கொண்டுபோக நினைக்க வேண்டாம். பிரிந்து செல்வதற்காக உங்களுக்கென்று ஒரு கூட்டத்தை உருவாக்காதீர்கள். அத்துடன் உங்களுடைய நீதியை அறிவிப்பதாக கூறி பலர் மத்தியில் குழப்பங்களை உருவாக்க முற்படக்கூடாது. ஏனெனில் இச்செயற்பாடு மற்றவர்களை சபை அதிகாரங்களுக்கு எதிராக தூண்டிவிடும். மாறாக மந்தைக்கூட்டத்தோடு புறப்பட்டுபோனால் ஒரு திருடனைப்போல் மாறிவிடுவீர்கள். எனவே ஜாக்கிரதையாய் இருங்கள். இதற்கு மாறாக மற்றவர்களுடைய மந்தையை நீங்கள் வைத்திருக்கும் போது அம்மந்தைக்கு நீங்கள் மேய்ப்பர்களாக அல்ல கூலியாட்களாகவே இருப்பீர்கள். அப்படி கூலியாட்களாக இருக்கும் போது பிரச்சனைகள், உபத்திரவங்கள் என்று வரும்போது மற்றும் அசாதாரண சூழ்நிலைகள் தோன்றும் போதும் மந்தைகளை கைவிட்டுவிடுவீர்கள். எனவே உங்களை கூலியாட்களாக இனம்காட்ட உங்களுக்குரியதல்லாத மந்தைகளை சேர்க்காமல் மேய்ப்பர்களாக காண்பிக்க பிரமாணத்தின்படி செயற்படுங்கள்.

## எதிர்பேசாதிருங்கள்.

உங்களுக்கும் தலைவர்களுக்கும் இடையில் பிரச்சனை தோன்றி அதன்நிமித்தம் நீங்கள் விலகிச்செல்ல முற்பட்டால் அவர்களுடன் எதிர்பேசாமல் சாந்தத்தோடும் விவேகத்துடனும் விலகிச்செல்ல வேண்டும். கோபத்துடன் நீங்கள் புறப்பட்டுச்செல்லும் சூழ்நிலை தோன்றினாலும் எதிர்மறைவான செயற்பாட்டினை காட்ட வேண்டாம்.

உ + ம், கதவை அடித்துப் பூட்டுதல், கதிரைகளை உடைத்துத் தள்ளுதல் போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம். எனவே கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதபடி ஞானமாய் நடந்துகொள்ளுங்கள்.

## சுய உரிமைகளை விட்டுவிடுங்கள்.

விட்டு விலகும் போது அங்கு உங்களுக்கு ஏதாவது இருந்தாலும் அதை அவர்களிடம் விட்டுவிடு. எதையும் உங்களுடையது என்று உரிமை பாராட்ட வேண்டாம்.

உ+ம், அந்த காணி எனக்குத்தான், சபை கட்டிடம் எனக்குத்தான் என்று எதையுமே உரிமை பாராட்ட வேண்டாம். எல்லாவற்றையும் விட்டு நீங்கள் மாத்திரம் விலகுங்கள். உங்களுக்கென்று எதுவுமே உரிமை கொண்டாடாமல் கர்த்தர் நிமித்தம் தேவவார்த்தையின்படி செயல்படுங்கள்.

# ஆலோசகரிடம் அல்லது தலைவரிடம் காணப்படவேண்டிய சிறப்பியல்புகள்.

### 01. ஆசை அல்லது விருப்பம்

**அவர்களுக்கு ஆலோசனை கொடுக்க விருப்பம்.**

அவர்கள் வாழ்க்கையிலே செழிப்படைய அல்லது முன்னேற விருப்பம்.

**யோவான் 14:12** - ***“மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளைச் செய்வான்.”***

இந்தக் காரியத்தை ஒருவருக்குள் வற்புறுத்தி திணிக்கவே முடியாது. ஆலோசகராக அல்லது தலைவராக இருப்பவர் அந்தப் பணி செய்ய தங்களை யாரெல்லாம் ஆலோசகராக தெரிவு செய்கிறார்களோ அவர்கள் எல்லோருக்கும் ஆலோசனை கொடுக்க விருப்பம் அல்லது ஆசை உடையவராக இருக்கலாம். அலட்சியப் போக்கில் செயற்படுபவராக இருக்கக்கூடாது. ஆசை அல்லது விருப்பம் முழு மனதுடன் வெளிப்பட வேண்டிய ஒரு முக்கிய காரியம்.

இந்த வசனத்தில் பார்த்தால் இயேசு தெளிவாக சொல்கிறார். தன்னை விசுவாசிக்கிறவன் பெரிய காரியங்களை செய்வான். அதே போல ஆலோசகர் பணி செய்கிறவர் இப்படிப்பட்ட எண்ணமுடையவராக இருக்க வேண்டும். தன்னை நம்பி தன்னுடைய ஆலோசனை பெறுகின்றவர் வாழ்க்கையில் தன்னைவிட முன்னேற்றமான நிலையில் வரவேண்டும். தன்னை விட ஒரு வெற்றியுள்ள ஆலோசகராக வரவேண்டும் என்ற விருப்பம் உடையவராக இருக்க வேண்டும். அதை விட்டு தன்னைவிட அவர் பெரிய ஆளாக வரக்கூடாது என்று காரியங்களை மறைக்கக் கூடாது. ஆலோசகரின் ஆசை எல்லாம் தன்னிடம் ஆலோசனை பெறுபவரின் வாழ்க்கையானது தன்னைவிட உயர்ந்த ஸ்தானத்துக்கு வரவேண்டும் என்பதாகும்.

### 02. தைரியம் அல்லது நம்பிக்கை.

அவர்களை எதிர் நோக்கி உண்மைகளை எடுத்துக் கூறக்கூடிய தைரியம்

**2தீமோ 4:2 - "*சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு' எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்*".**

ஆலோசனை கொடுப்பவர் தன்னிடம் ஆலோசனை பெறவரும் நபர் மீது அவரை திருத்தக்கூடியவராக அல்லது அவர் நல்ல நிலையில் என்னால் அவரை மாற்றமுடியும் என்ற நம்பிக்கை அல்லது தைரியம் இருக்க வேண்டும். ஏதாவது தவறு விடும்போது அல்லது மாறாக ஏதும் காரியம் செய்யும்போது அவரை எதிர்த்து தைரியமாக இது பிழை, இப்படி செய்யாதே என்று அவரை கடிந்து சொல்லக்கூடியவராக இருக்க வேண்டும். அதைத்தான் அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறான். ஆலோசகர் ஆலோசனை பெறுபவரை தட்டி , உடைத்து நிமிர்த்தி சரியான நிலைக்கு கொண்டுவர வேண்டிய தைரியம் உடையவராக இருக்க வேண்டும்.

### 03. முதிர்ச்சியடைந்த நிலை.

**1 தீமோ 4:12 "*உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு*".**

கண்காணித்தல். 1தீமோ. 3:1-7

முதிர்ச்சியடைந்த நிலை என்று சொல்லும்போது வயதை மாத்திரம் சொல்லவில்லை அதாவது தீமோத்தேயு இளம் வாலிபன் ஆனாலும் அந்த சபை மக்களுக்கு முதிர்ச்சியடைந்தவனாக இரு என்று பவுல் ஆலோசனை கூறுகிறார். எனவே ஆலோசகர் இளமையோ முதுமையோ அவர் உண்மையான தேவமனிதராக இருக்கவேண்டும், குறிக்கோள் அல்லது நோக்கத்தை உறுதியாக கடைப்பிடிப்பவராக இருக்கவேண்டும், கோட்பாடுகள் அல்லது குறிக்கோள்களை மாற்றுபவராக இருக்கக்கூடாது, ஆராதிக்கும்

சபைகளை மாற்றக்கூடாது, சத்தியத்திலே உறுதியுடையவராக, அவரது வாழ்க்கை மற்றவர்களுக்கு மாதிரியாக இருப்பதே முதிர்ச்சியடைந்த நிலை. மற்றும் ஆலோசனை பெறுபவரின் சகல செயற்பாடுகள் நடை, உடை, பாவனைகளை கண்காணிக்கின்றவராக இருக்க வேண்டும். கண்காணித்தல் என்றால் அவரையே உற்று நோக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்றல்ல; எந்த நிலையிலும் அவர் எங்கு போகிறார், என்ன செய்கிறார் என்று கவனம் எடுத்தல் ஆலோசகர் பொறுப்பு.

### 04. சகிக்கும் தன்மை அல்லது ஆற்றல்.

அவர்களுக்காக நின்று சகிக்கும் அனுபவம்.

உ + ம்: - ஆபிரகாம் , லோத்

சகித்தல் என்றால், அவர்கள் தவறாக ஏதாவது செய்யும் போது அதை பொறுத்துக்கொண்டு அவர்களை திருத்தக்கூடிய ஆற்றல் உடையவராக அவர்கள் பக்கமாக நிற்றல். உ + ம், ஆபிரகாம் லோத்துவின் பக்கம் நின்று அவனை முதலில் விரும்பிய பிரதேசத்தை தெரிவு செய்ய சொன்னான். அதே போல ஆலோசகரும் ஆலோசனை பெறுபவரின் பக்கம் நிற்க வேண்டும்.

### 05. முழுமை அல்லது சீரிய நிலை அல்லது உருக்குலையாத நிலை.

தனிப்பட்ட அந்தரங்க வாழ்வு கறைப்படாது, உருக்குலையாது இருக்க வேண்டும்.

1 தீமோ 3: 2-7

அவர் முழுமை உடையவராக இருக்க வேண்டும். அவருடைய வாழ்வு வெளிப்புறமாகவும் அந்தரங்கமாகவும் கறைப்படாததாக இருக்க வேண்டும். தீமோத்தேயுவில் சொல்லப்பட்ட இந்த காரியங்களை உடையவராக இருக்க வேண்டும். அவருடைய அற ஒழுக்க நெறி சீர்குலையாது இருக்க வேண்டும்.

### 06. நம்பக்கூடியவாறு அல்லது போலியல்லாத நிலை.

அவர்கள் போலியல்லாதவர்களாக, அவர்களிடம் காணப்படுவதை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.

ஆலோசகர் ஆலோசனை பெறுபவருக்கு நம்பத்தகுந்தவராக இருக்க வேண்டும். அதாவது ஆலோசனை பெறுகிறவர் தன் ஆலோசகரை நம்பக்கூடிய வகையில் ஆலோசகர் அந்த நம்பிக்கைக்கு பாத்திரவனாக இருக்க வேண்டும். ஆலோசகரிடம் போலியான காரியங்கள் காணப்படவே கூடாது. அவரிடம் உள்ள காரியங்கள் போலியல்ல உண்மையானதே என பெறுபவர் முழுவதும் நம்பத்தகுந்த முறையில் நடக்கணும்.

### 07. அணுகத்தக்க நிலை அல்லது நெருங்குதல்.

அவர்களை அருகிலிருந்தோ தூரத்திலிருந்தோ அணுகத்தக்கதாக இருக்க வேண்டும்.

ஆலோசகர் ஆலோசனை பெறுபவரை எந்நேரமும் அணுகத்தக்கவராக இருக்க வேண்டும். ஆலோசகர் அருகில் இருந்தாலும் தூரத்தில் இருந்தாலும் எவ்வேளையிலும் அவரை அணுகி அவருக்கு ஆலோசனை கொடுக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

## ஆலோசகர் அல்லது தலைவர் அவர்களுக்கு கீழாக இருந்து ஆலோசனை பெறுபவர்களை குறித்து நடைமுறைப்படுத்த வேண்டிய அல்லது செயற்படுத்த வேண்டியபணிகள் சில.

### 01. அவர்களுடைய போக்கையும் வரத்தையும் கவனித்து அபிப்பிராயம் தெரிவித்தல்.

ஆலோசனை பெறுகிற நபர் எங்கு எல்லாம் போகின்றார். எங்கு அதிகமாக நேரம் செலவிடுகின்றார். யார் அவரது நண்பர்கள் போன்ற அவருடைய போக்கையும் நோக்கத்தையும் கவனித்து ஏதாவது காரியம் ஆலோசகரை திருப்திப்படுத்தவில்லை என்றால், அதை குறித்து தனது அபிப்பிராயம் கூறி அவருடைய போக்கை ஒழுங்கு மாற்றிக்கொள்ள உதவி செய்தல் வேண்டும்.

### 02. அவர்களது நல் வாழ்வுக்காக ஆவிக்குரிய பொறுப்பாளராக செயற்படல்.

ஆலோசனை பெறுபவரின் சரியான நடைமுறை வாழ்வின்ஆவிக்குரிய பொறுப்பாளராக இருந்து ஆவிக்குரிய சகல காரியங்களிலும் அவருக்கு உறுதுணையாக நின்று அவர் தேவனுக்குள் வளர்ந்து வருவதற்கு பொறுப்புடையவராக செயற்படவேண்டும். ஏனோதானோ என்று செயற்படகூடாது. ஆவிக்குரிய ரீதியில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

### 03. அவர்களுடன் நேரம் செலவிடல்.

ஆலோசகரை பொதுவாக பார்த்தால் சபையில் தலைமைபீடத்தில் இருப்பவர். அவருக்கு சபையை கவனிக்க வேண்டும், மற்றும் பல காரியங்கள் உண்டு. ஆனாலும் யாரெல்லாம் அவரை நெருங்கிய ஆலோசகராக வைத்திருக்கிறார்களோ அவர்களுடன் அவர் முயற்சி எடுத்து மற்ற காரியங்களை ஒதுக்கி அவர்களோடு நேரம் செலவிடல் வேண்டும்.

### 04. ஞானத்திற்குரிய வழிமுறைகளை வெளிப்படுத்தல்.

ஆலோசனை பெறுபவரின் ஞானத்திற்கு தேவையான வழிமுறைகள் அல்லது திறவு கோல்களை எடுத்துக்கூறி அவர் வாழ்க்கையில் ஞானமாக செயற்பட உதவி செய்ய வேண்டும்.

### 05. அவர்களுடைய வெற்றிக்கான வழிகளை ஏற்படுத்தல்.

ஆலோசனை பெறுபவர்கள் வாழ்க்கையில் வெற்றியுள்ளவர்களாக வளர்ந்து வருவதற்கு தேவையான வழிமுறைகள் அல்லது பாதைகளை அவர்களுக்கு உருவாக்கி கொடுத்தல்.

உ + ம் ஆராதனை வழிநடத்துவதில் ஆலோசனை பெறுகிறவர் சிறக்க வேண்டுமானால் அவருக்கு ஆராதனை வழிநடத்த பல சந்தர்ப்பங்கள் கொடுக்க வேண்டும்.

### 06. அவர்களுடைய வாழ்க்கையின் சோதனைகள் பாடுகளுடன் சேர்ந்து நடத்தல்.

அவர்களுடைய வாழ்க்கையின் சகல இன்ப, துன்ப, வேதனையான அனுபவங்கள் மத்தியிலும் அவர்களுடன் சேர்ந்து அதற்கூடாக கடந்து செல்பவராக இருக்க வேண்டும்.

### 07. பயன்கள் விளைவுகளுக்கு பதில் செய்பவர்களாக எதிர்பார்த்தல்.

ஆலோசகரிடம் இருந்து பெற்ற பயன்களுக்கு பதில் செய்பவராக, அதன் பிரதிபலன் சரியாக கொடுப்பவராக அல்லது மற்றவர்களுக்கு அவர் ஆலோசகராக இருந்து பெற்ற சகல பயன்களையும் மற்றவர்களுக்கு கொடுக்ககூடியவராக எதிர்பார்த்தல்.

## சகாக்களுடன் ஏற்படும் பிணக்குகள், வாக்குவாதங்கள், சண்டைகள், அபிப்பிராய பேதங்களை எவ்விதம் கையாள வேண்டும்.

### 01. அதனோடு கூட சமாளியுங்கள்.

சகமனிதருடன் நமக்கு ஏற்படுகின்ற பிணக்குகள் அல்லது போராட்டங்கள் அல்லது அபிப்பிராய பேதங்களை சண்டையிட்டு போராடாமல் அப்படியே அவற்றோடு சமாதானமாய் செயலாற்ற பழகவேண்டும்.

### 02. உனது குழப்பம் என்ன என்பதை உட்கார்ந்து எழுதுங்கள்.

இப்படிப்பட்ட நிலை எமக்கு ஏற்படும்போது உட்கார்ந்து என்ன காரியம் உன்னை குழப்புகிறது. எதனால் உனக்கு பிரச்சனை. இது எவ்வாறு உருவாகியது. ஏன் உருவாகியது என்று பட்டியல் போட்டுக்கொள்.

### 03. உன்னுடைய குறிக்கோள் அல்லது இலக்குகளை தீர்மானியுங்கள்.

உன்னுடைய வாழ்க்கையின் முதல்தரமான குறிக்கோள் என்ன, இரண்டாம் தரமான குறிக்கோள் என்ன , ஏனைய குறிக்கோள் என்ன என்று சொல்லி நோக்கங்களையும் தீர்மானிக்க வேண்டும்.

### 04. மனதை உருக்கும் அல்லது உணர்ச்சி மிக்க கதையை விலக்குங்கள்.

உன்னுடைய மனதை உருக்குகின்ற காரியங்கள் அல்லாவிட்டால் உன்னுடைய உணர்ச்சிகளை தூண்டி விடுகின்ற சகல செயற்பாடுகள் சிந்தைகள் பேச்சுக்கள் எல்லாவற்றையும் உன்னைவிட்டு விலக்கிப்போட வேண்டும். மனதுருகி உனது உள்ளம் பிணக்கு அல்லது போரட்டத்தினால் உடைந்து விடக்கூடாது. ஆண்டவருக்காக ஊழியம் செய்கின்றேனே ஏன் எனது வாழ்க்கையில் வியாதி? – இப்படி யோசிப்பதில் நேரம் செலவிடாதே.

### 05. உண்மைகளை மட்டுமே வெளிக்கொண்டு வரவேண்டும்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் எதையும் மிகைப்படுத்தி கூறாமல் அல்லது உணர்ச்சி பூர்வமாக எதையும் பேசாமல் நடந்த உண்மை காரியங்களை மட்டுமே வெளிக்கொண்டு வரவேண்டும். உண்மையை விட்டுவிட்டு உணர்ச்சிகளை வெளிக்கொண்டுவரும் போது இன்னும் பிணக்கு அல்லது அபிப்பிராய பேதங்கள் அதிகரித்துச் செல்லும். அதை கட்டுப்படுத்துவது கடினம்.

### 06. உங்களைக்குறித்து உங்கள் எண்ணம் போல் மற்றவர்களை நடத்துங்கள்.

மற்றவர்கள் உனக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்த்தால் நீ மற்றவர்களுக்கு தீமை செய்யாமல் நன்மையே செய்ய வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாங்கள் தீமைக்கு தீமை செய்யவே கூடாது. எமக்கு இன்னுமொருவர் தீமை செய்வதை எள்ளளவேனும் நாம் விரும்பமாட்டோம். அதே போலத்தான் மற்றவர்களும்; எனவே அவ்வேளையில் நாம் மற்றவர்கள் எம்மை எப்படி கதைக்கவேண்டும் அல்லது செயல்படவேண்டும் என்று நினைப்போம். அப்படியே அவர்களுக்கும் செய்ய வேண்டும்.

### 07. தவிர்க்க வேண்டிய சில வார்த்தைகள்.

நீங்கள் எப்போதும் ..........................................

நீங்கள் ஒரு போதும் ..........................................

இந்த காரியத்தில் உன்னை வெறுக்கின்றேன், ஏன் உன்னால் இப்படி இருக்க முடியாது.

இப்படிப்பட்ட பிணக்குகள் அல்லது போராட்டங்கள் அல்லது பேதங்கள் ஏற்படும்போது சில வார்த்தைகளை தவிர்க்க வேண்டும். இப்படி தவிர்க்க வேண்டிய வார்த்தைகளை கூறும்போது பிணக்கு இன்னும் அதிகரிக்கும். கருத்து வேறுபாடு நீண்டுகொண்டே போகும்.

### 08. தாக்கத்தை ஏற்படுத்தாத சொற்களை பாவிக்கலாம்.

உ + ம் , அவ்விதமாக நானும் பார்க்கின்றேன்.
நானும் அதை உணர்ந்து கொண்டேன்.

இப்படிப்பட்ட வார்த்தை பிரயோகங்களை பாவிக்கும் போது பிணக்குகள் அல்லது போராட்டங்கள் அப்படியே அமர்ந்துபோக வாய்ப்புண்டு. நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருக்க வேண்டும். எனவே இப்படியான வார்த்தைகள் கடினமான இருதயங்களை இளகப்பண்ணக்கூடியது.

### 09. அவர்களுடைய நிலையை தெரிவிக்க சந்தர்ப்பம் கொடுங்கள்.

இப்படிப்பட்ட பிணக்குகள் அல்லது அபிப்பிராயங்கள் அல்லது பேதங்கள் ஏற்படுகின்ற போது எப்போதுமே எங்களுடைய பேச்சு பேசி மற்றவன் தனது பக்கத்தை சொல்ல இடமளிக்காது நாமே தொடர்ந்து கதைத்து கொண்டிருக்கக்கூடாது. அவர்களது கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக அவர்களுக்கும் நேரம் கொடுக்க வேண்டும்.

### 10. ஒரு போதும் ஒன்றையும் மிகைப்படுத்தி கூறாதீர்கள்.

எந்த ஒரு காரியத்தையும் நடந்ததைவிட திரிவுபடுத்தி அல்லது மிகைப்படுத்தி கூறவே கூடாது. நடந்தது இதுதான் என்று சரியானதை மட்டுமே கூறு. தவறு விட்டுவிட்டு அதை மறைக்க குறைத்துகூற முற்படாதே. உள்ளதை உள்ளபடி சொல்.

### 11. அவசர தீர்மானங்களை எடுக்காதீர்கள்.

ஒருவர் விடும் தவறுகளை (சாதாரண) வைத்து அவர்களை பிழையான நபர் என்ற தீர்ப்புக்கு வந்துவிடவேண்டாம். அவருடைய பிழையான நடவடிக்கைகளை சீர் செய்து வழிநடத்த வேண்டும்.

எனினும் ஊழியத்தில் ஈடுபடுகின்ற ஒருவர் வேதாகமம் எதிர்பார்க்கும் தகைமைகளில் இருந்து தவறும் பட்சத்தில் மேற்குறிப்பிட்ட விடயம் விதிவிலக்கானது. உதாரணமாக: விபசாரம், விவகாரத்து, அவிசுவாசியை திருமணம் செய்தல் இப்படிப்பட்டவை.

## நேரத்தை முகாமைத்துவப்படுத்த சில துணுக்குகள்

1. ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய காரியங்களை குறித்துக் கொள்ளுங்கள்.

2. மேலதிக நேரத்தை ஞானத்தோடு பயன்படுத்து.

3. 'இல்லை" என்று சொல்வது பரவாயில்லை.

4. ஒவ்வொரு இரவும் தேவையான அளவு நித்திரை எடு.

5. உனது திட்டத்தை மற்றவர்களுடன் கலந்துரையாடு.

6. உனக்கென தனிப்பட்ட நேரம் ஒதுக்கு.

7. மனக்கிலேசப்படுவதில் அல்லது வேதனை அல்லது துக்கப்படுவதில் நேரத்தை வீணாக்காதே.

8. ஒரு காரியத்தை முதல் தடவையே சரியாக செய்து முடிக்க முயற்சி எடு.

9. நேரத்தை வீணாக்க அல்லது பொழுது போக்காக கதைப்பவர்களை விட்டுவிலகு – அரட்டை அடிக்கிறவர்களை நாடாதே.

10. திட்டமிடும் அல்லது ஒழுங்குபடுத்தும் கருவி ஒன்றை பயன்படுத்தலாம்.

இதுவரை காலமும் நீங்கள் தலைவர் அல்லது ஆலோசகரின் முக்கியத்துவத்தை அறியாது இருந்திருக்கலாம். ஆனால் இதை கற்றுக்கொண்ட நீங்கள் உங்களது வாழ்வில் சரியாக தலைவர் அல்லது ஆலோசகரை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தலைமைத்துவதத்திற்கு கீழ்படியுங்கள்; அப்போது தேவ ஆசீர்வாதம் உங்களுடைய பங்காய் மாறும்.

**"தேவன் தாமே உங்களை**
**ஆசீர்வதிப்பாராக"**

மேற்படி கருத்தரங்கின் படி உங்களுடைய வாழ்க்கையில் உங்களுக்கான நம்பகரமான ஆலோசகரை தெரிவு செய்து கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

உங்களுடைய வாழ்க்கையின் ஆலோசகர் யார் என குறிப்பிடுங்கள்.

தூர ஆலோசகர் :-.................................................................

நெருங்கிய ஆலோசகர் :-..................................................

---

உங்கள் பெயர் :-..................................................................

சபையின் பெயர் :-..............................................................

திகதி:-................................

கையொப்பம்:-......................................

Subject :- MENTORING.
பாடம் :- நம்பகமான ஆலோசகரும் ஆலோசனையும்.

Lecturer :- Pastor. Johanan D. Philip.
ஆசிரியர் :- போதகர். ஜோஹனன் டி. பிலிப்.

1st Edition :- 200 Copies - July 2009
1ஆம் பதிப்பு :- 200 பிரதிகள் - யூலை2009

2nd Edition :- 200 Copies - January 2010
2ஆம் பதிப்பு :- 200 பிரதிகள் - ஜனவரி 2010

Published By :- Zion Bible Institute.
வெளியீடு :- சீயோன் வேதாகமப் பாடசாலை.



Copy Right :- Please do not re published this lesson without prior written permission from Zion Church, Jaffna.
பதிப்புரிமை :- இப் பிரசுரத்தை எவ்வடிவத்திலாவது மீள்பிரசுரம் செய்வதாயின் சீயோன் தேவாலயத்தின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:-
சீயோன் காரியாலயம்,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P No: 0212222707

ZION CHURCH OFFICE,
347, NAVALAR ROAD,
JAFFNA.